www.xtrapapers.com



Diploma Programme
Programme du diplôme
Programa del Diploma

# Tamil A: literature – Standard level – Paper 1
# Tamoul A : littérature – Niveau moyen – Épreuve 1
# Tamil A: literatura – Nivel medio – Prueba 1

Friday 8 May 2015 (afternoon)
Vendredi 8 mai 2015 (après-midi)
Viernes 8 de mayo de 2015 (tarde)

1 hour 30 minutes / 1 heure 30 minutes / 1 hora 30 minutos

---

### Instructions to candidates

- Do not open this examination paper until instructed to do so.
- Write a guided literary analysis on one passage only. In your answer you must address both of the guiding questions provided.
- The maximum mark for this examination paper is **[20 marks]**.

### Instructions destinées aux candidats

- N'ouvrez pas cette épreuve avant d'y être autorisé(e).
- Rédigez une analyse littéraire dirigée d'un seul des passages. Les deux questions d'orientation fournies doivent être traitées dans votre réponse.
- Le nombre maximum de points pour cette épreuve d'examen est de **[20 points]**.

### Instrucciones para los alumnos

- No abra esta prueba hasta que se lo autoricen.
- Escriba un análisis literario guiado sobre un solo pasaje. Debe abordar las dos preguntas de orientación en su respuesta.
- La puntuación máxima para esta prueba de examen es **[20 puntos]**.



2215 – 0655
© International Baccalaureate Organization 2015

International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

www.xtrapapers.com



ஏதாவது **ஒரு** கேள்விக்கு மட்டும் (1 or 2) கீழேயுள்ள கேள்விகளையும் பயன்படுத்தி ஆசிரியரின் நோக்கங்களையும் ஆராய்ந்து விளக்கமாக எழுதவும்

**1.**

லட்சுமியும் சீனிவாசனும் அவர்கள் அம்மா, தங்கையுடன் ஒரு பழைய வாடகை வீட்டில் வசித்து வந்தனர். அவர்களின் தந்தை வேலை தேடி வேறு ஊருக்குப் போயிருந்தார். லட்சுமியும் சீனிவாசனும் மற்ற குழந்தைகளுடன் கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள். “எல்லாரும் டிக்கட் வாங்கிக் கொள்ளுங்க” என்றான் சீனிவாசன். உடனே “எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்” என்று சத்தம் போட்டார்கள். “எந்த ஊருக்கு வேண்டும்? ஓய்... இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம்? அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன். “இல்லை, இல்லை இடிச்சித் தள்ளலெ.” “சரி எந்த ஊருக்கு டிக்கட் வேண்டும்?” குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு ஒவ்வொரு இடத்தின் பெயரைச் சொன்னார்கள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட் கொடுத்து முடிந்ததும் கதவில் பிடித்துத் தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். குழந்தைகள் கதவோடு ஒவ்வொரு இடமும் போகிற மாதிரி ஏறியும் இறங்கியும் பாவனை பண்ணி கதவோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் காலை வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தலையாரி, நான்கு பேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் கழற்ற முயன்றார்கள்; முடியவில்லை. குழந்தைகள் வீட்டுப் பக்கம் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்துப் பிடித்து ஒரு மாதிரிக் கழற்றி, நான்கு பேரும் கதவைத்தூக்கி தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அதை ஒரு ஊர்வலம் என்று நினைத்து சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக் கொண்டான். இப்படி உற்சாகமாகக் குழந்தைகள் கதவைத் தூக்கிக்கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள். தலையாரியால் இதைச் சகிக்க முடியவில்லை, “இப்போ போகிறீர்களா இல்லையா” என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது, லட்சுமி வாசல்படியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல், அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டான். இப்படி வெகு நேரம் அவர்களால் அங்கு இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், “நான் வீட்டுக்குப் போறேன்” என்று எழுந்தாள். உடனே எல்லாரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை. அம்மா வந்தவுடன் உள்ளே போய் காலையில் நடந்த சேதியைச் சொன்னார்கள். அப்பா ஊரில் இல்லாதபடியால் அம்மா வேலை செய்து குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

www.xtrapapers.com



சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒரு நாள் அவன் மத்தியானம் அக்காவிடம் வந்து, "அக்கா, எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கிறது; சாப்பிட்டுவிட்டு இந்தப் படத்தை ஒட்டலாம்." என்றான்.

"தம்பி கஞ்சி இல்லை" இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.
"ஏன்! காலையில் நீ காய்ச்சும் போது நான் பார்த்தேனே?"
"ஆம்" என்ற முறையில் தலையசைத்துவிட்டு, "நான் வெளியே போய் இருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது... கதவு இல்லையே" என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி. சீனிவாசன் படத்தை ஒட்ட வரும் போது தான் கதவு இல்லை என்று ஞாபகம் வந்தது. சுவரில் ஒட்டப் பார்த்தான். படம் ஒட்டவில்லை

சாயந்திரம் லட்சுமி சட்டி பானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டு இருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க லட்சுமியிடம் ஓடி வந்தான்.

"அக்கா அக்கா நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு, அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டு கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பார்த்தேன்" என்றான்.

"அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பார்ப்போம்" என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள். இருவரும் சாவடியை நோக்கி ஓடினார்கள்.
உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச் சிறுவர்கள், பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை. அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல முடியாது. அங்கே முளைத்திருந்த சாரணத்தியும், தை வாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள். அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள். கதவோடு தன் முகத்தை ஒட்ட வைத்துக் கொண்டாள். அழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

கதவு - கி. ராஜநாராயணன் (1965)

(a) கஷ்டகாலத்திலும் குழந்தைகளால் சந்தோஷமாக இருக்கமுடியும் - இக்கருத்தை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் என்று எழுதவும்.

(b) ஆசிரியர், கதைக்கு முக்கியத்துவம் கொடுக்க குழந்தைகளின் கதாபாத்திரத்தை எவ்வாறு சித்தரித்து இருக்கிறார் என்பதைத் தொகுத்து எழுதவும்?

www.xtrapapers.com



**2.**

## அருள் உரிமை

தேவதத்தன் அன்னப்புள்ளை எய்தல்

உலகம் முழுதும் ஒரு குடையின் கீழ்
ஆளும் அண்ணல் அரண்மனை யருகில்
மலர்ந்த மலர்கள் மணமிக வீசப்
பொறிவண்டு ஆடும் பூம்பொழில் மீது,
வடதிசை இமய மாமலை அமர்ந்த
வாழிடம் நோக்கி, வளரும் அன்பால்
உருகிய உள்ளம் ஒழுகிய தென்னப்
பாடியே அன்னப் பறவைகள், வான
வீதி வழியே விரைந்து சென்றன.
செல்வது கண்டு, தேவ தத்தன் —
அரசிளங் குமரற்கு அண்டிய உறவினன் ---
வில்லினை வளைத்து வெய்யதோர் பாணம்
எய்து நின்றனன்! எய்த அப் பாணம்
முதன்முத லாகமுன்னர்ச் சென்ற
அன்னப் பறவையின் அகன்சிறை யதனில்
படவே; ரத்தம் பாயப் பறவையும்
தளர்ந்து சுருண்டு தரையில் விழுந்தது.

சித்தார்த்தன் அதை எடுத்தல்

விழுந்த அப்பறவை, மேனி முழுதும்
ஒழுகி ஓடும் உதிரம் புரளத்
துள்ளித் துள்ளித் துடிப்பது கண்டு,
சிந்தை கனிந்து, திருமா மன்னரின்,
செல்வக் குமரன் சித்தார்த் தன்போய்,
மலர்ந்து விரியா வாழைக் குருத்தினும்
தண்ணிய கரங்களால் தாங்கி எடுத்து,
மடியில் வைத்து மார்போடு அணைத்துத்
தழுவித் தழுவித் தளர்ச்சி நீக்கினன், --- அப்பால்,
இடக்கையிற் பறவையை ஏந்தி, அம்பினை
வலக்கை யதனால் வாங்கி, வடிந்த
உதிரம் மாற்றி, உறுத்திய புண்ணில்
தேனும் தளிரும் சேர்த்துப் பிசைந்து
பூசியே வருத்தம் போக்கினன் ஆங்கே,
இத்தனை அன்பு காட்டினன் எனினும் --- அவன்,
நோவு நொம்பலம் நோயின் தன்மை
இந்நாள் வரையிலும் யாது என அறியான், --- ஆதலின்
பறவையின் மீது பாய்ந்த அம்பின்
முனையைத் தனது முழங்கை யதனில்
அமுக்கிப் பார்த்தனன்; “ஐயோ!” என்றனன்!
பரிந்து பின்னும் பறவையை எடுத்துத்
தாயினும் இரங்கித் தழுவி அணைத்தனன்.

ஆசிய ஜோதி - சி. தேசிகவிநாயகம்பிள்ளை (1941)

www.xtrapapers.com



(a) ஆசிரியர் இப்பாட்டின் கருத்தை எவ்வாறு புத்தர் வாய்மொழியாகக் கூறுகிறார் என்பதை எழுதவும்.

(b) “ஆசிரியர் மக்களின் மனதைக் கவர வேண்டும் என்பதற்காக இக்கவிதையை ஆழ்ந்த உணர்ச்சியுடனும் தமிழின் குழைவுடனும் இயற்றி உள்ளார்.” இக்கருத்தை விளக்கி எழுதவும்.